# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 45வது கூட்டறிக்கை 2021.11.16

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 45வது அமர்வு 2021.11.16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதீ.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. | ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. | திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 45வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, நமது உள்ளூராட்சி சபைகளுக்காக UNDP இன் உதவியோடு செயற்படுத்தப்படும் LDSP திட்டத்தின் கீழ் முதல் வேலையாக நமது காரியாலயத்தில் lift

பொருத்தினோம். இந்த செயற்பாட்டில் நமது செயன்முறையை நூற்றுக்கு 93% நாம் வெற்றிகரமாக செய்திருக்கின்றோம் என்ற அடிப்படையில் மேலும் LDSP கொடுப்பனவில் 9 மில்லியன் நமக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. இதில் 2ம் கட்ட வேலையாக வீரமுனையில் சிறுவர் பூங்காவும், 3வதாக ஆலையடிச்சந்தையில் சிறுவர்களுக்கான விளையாட்டு அரங்கு செய்வதற்கும் நாம் முடிவு எடுத்திருந்தோம். அதே போல் இந்த பணம் சிறுவர் விளையாட்டு இடத்திற்கு முதற் கட்டமாக கட்டுமான வேலைகளுக்கு மட்டும்தான் போதியதாக ஒதுக்கீடு இருந்தது. அதனோடு இந்த ஒதுக்கீட்டில் அதை பூர்த்திசெய்வதற்கும், சம்பூரணமாக நமது வாகனங்களை சேவிஸ் செய்து திருத்தக்கூடிய அளவுக்கு உபகரணங்களை வாங்குவதற்காகவும் முன்மொழிவுகள் செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்த வருட வருமானத்திற்காக நாம் இறைச்சிக்கடைகளையும், பொதுச்சந்தைகளையும் ஏலத்தில் விட்டிருந்தோம். அதில் 4 இறைச்சிக்கடைகளைத் தவிர மற்றவைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. திறந்தவெளி பொதுச் சந்தையும் எடுக்கப்பட்டு இருக்கின்றது. இதில் இறைச்சிக் கடைகளின் வருமானம் நமக்கு அடுத்தவருடத்திற்கு வருமா? என்பது பொருத்திருந்து பார்க்க வேண்டிய விடயம் ஒன்று. அதுக்கு அப்பால் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஒதுக்கீடுகள் செய்யப்படும் என்ற அறிகுறி தென்படுகின்றது. அப்படி இருந்தும் நமக்கு அரச சேவை இந்த நாட்டுக்கு சுமை என்ற அறிவித்தலில் சில வேளைகளில் ஊழியர்களை கூட்டுவது அல்லது இருக்கும் ஊழியர்களை நிரந்தரமாக்குவது ஒரு சவாலாக வரலாம். அது எந்தளவுக்கு உள்ளூராட்சிகளுக்கு பாதிக்கும் என்பது இன்னும் விளங்காத விடயம். வரவு செலவுத் திட்ட விவாதம் மூலமாக மாற்றங்கள் வரக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றது.

அடுத்தாக சென்ற சபையில் இருந்த அங்கத்தவர்களுக்கு தெரியும் சென்ற சபை சென்னல் கிராமம் - 01 இல் இருக்கும் சபூர் சனசக்கு மூலிகை வளர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட காணி, அந்த காணி மீண்டும் அரசுக்கு எடுக்கப்பட்டு மக்களுக்கு அதை பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற ஒரு அழுத்தம் இருந்ததனால் அந்த சபை அந்த முயற்சியை எடுத்து சில நடவடிக்கைகளினால் அது தடுபட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் அந்த சங்கத்தின் அங்கத்தவர்கள் அந்த வளவில் எந்தவொரு அனுமதி இல்லாமல் வீடுகள் அமைத்து பிரதேச சபையின் சட்டத்தை மீறியதற்காகத்தான் நாம் அந்த நடவடிக்கையை எடுத்தோம். அந்த விடயம் மீண்டும் மாகாண சபைக்கு நினைவு காட்டப்பட்டு மாகாண சபையினால் பிரதேச செயலாளருக்கு அந்தக் காணியின் நிலையை பற்றிய விளக்கம் அளிப்பதற்கு கடிதம் வந்துள்ளது. குறிப்பிட்ட காணி அந்த சங்கத்திற்கு ஒரு காரணத்திற்காக Model Farm உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்டது. அங்கத்தவர்களுக்கிடையில் அதை பகிர்ந்து அவர்கள் அதை பங்களிப்பதற்கு எடுத்த முயற்சியை ஒரு சபை என்ற ரீதியில் நாம் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது. ஏனென்றால் அது இன்று இந்த ஊரில் எத்தனையோ ஏழைகள் இருப்பதற்கு இடம் இல்லாமல் இருக்கும் போது ஒரு சங்கத்திற்காக கொடுக்கப்பட்டதை அதன் அங்கத்தவர்கள் பிழையான வழியில் பாவிப்பதை நாம் இடமளிக்க முடியாது என்ற ரீதியில் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

இந்த சபை நீண்ட காலமாக சில்வாட மடு S வாய்க்கால் பாதை அமைத்தல் விடயம் சம்மந்தமாக சென்ற சனிக்கிழமைக்கு முந்திய சனிக்கிழமை நீர்பாசன Director General வந்திருத்தார். அவரின் காலத்தில் தான் நாம் கைகாட்டி பூங்கா அமைப்பதற்கு அனுமதி எடுத்து City Planning அமைச்சினால் ஒதுக்கப்பட்ட பணத்தை நமக்கு பாவிக்க கூடியதாக இருந்தது. அவரின் கட்டளையில் இந்த விடயத்தை மீண்டும் புதுப்பித்தவர் நமது கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள். அந்த பாதை S வாய்காலின் 8.240 இருந்து 8.813 வரை 6m அளவு பாதையை அமைத்து தருவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் அவர்களின் இயந்திரங்களை தந்து உதவுவதற்கு எழுத்து மூலம் அனுமதி தந்திருக்கின்றார்கள். ஆனால் ஒரு ஒப்பந்தம் அதில் எந்த நிரந்தர கட்டடங்களும் அமைக்க முடியாது. எந்த வேலை செய்வதென்றாலும் நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்பார்வையில் செய்யப்பட வேண்டும். அதே நேரம் ஏதாவது பிணக்குகள் ஏற்படுமானால் அந்த காணி மீண்டும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு போக வேண்டும். இதில் பாரிய வெற்றி என்னவென்றால் அந்த

துண்டுக்கு மட்டும்தான் அந்த வாய்காலில் பாதை இல்லை. அந்த பாதை வருமானால் சட்டத்திற்கு முரணாக அந்த வாய்க்கால் ஓரம் இன்று காணி பிடித்திருப்பவர்களுக்கும் மக்களுக்கும் அந்த வழியினால் போகக்கூடிய ஏற்பாடுகள் இலேசாக இருக்கும். அதே நேரம் University பின்னால் உடங்கா 2 இல் Irrigation Reservation காணியையும் அவர்கள் சபையின் பாவனைக்காக விடுவித்திருக்கின்றார்கள். இதில் மீண்டும் அவர்களுக்கு அதை சபைக்கு நிரந்தரமாக சட்ட ரீதியாக மாற்றுவதற்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். ஏனென்றால் நாம் உலக வங்கி மூலம் உதவி பெறுவதென்றால் அந்தக் காணி பிரதேச சபையின் பெயரில் இருக்க வேண்டும். என்ற நிபந்தனை வரலாம் அதனால் இது வாய்காலோடு நேரடி தொடர்பு இல்லாத இடம் என்றபடியினால் சபைக்கு ஒதுக்குவதற்கு பரிசீலனை செய்யுங்கள் என்று நான் எழுத்து மூலம் இந்த மாதம் 8ம் திகதி எழுதியுள்ளேன். இன்சா அல்லாஹ் அதுவும் வருமானால் UDA மூலம் அவ்விடத்தில் ஒரு சிறுவர் பூங்கா அமைப்பதற்கு வசதியாக வரலாம்.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

### தீர்மானம் - 04/45/01

சென்ற மாதம் 2021.10.01 தொடக்கம் 2021.10.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் வரிப்பணம் மதிப்பீட்டுத் தொகையில் 7% தான் நாம் அறவிடுகின்றோம். அதை நாம் வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும். இதை கூட்டுவதனால் இந்த சபை அந்த வீதத்தை கூட்டி பிரசுரிக்க வேண்டும். இதை கூட்டுவதா? குறைப்பதா? இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

### தீர்மானம் - 04/45/02

1987 ஆம் ஆண்டில் 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (I) ஆவது உப பிரிவினால் சம்மாந்துறை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சம்மாந்துறை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்றப்பட்ட பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்கும் சகல வீடுகளின், கட்டடங்களின், காணிகளின் வருடாந்த பெறுமதிக்காக 2021 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1) மற்றும் (2) ஆம் உப பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அந்தச் சொத்துக்களுக்கான மேற்குறித்த வரி மதிப்பீட்டிற்கு வருடாந்த பெறுமதியில் இருந்து (7%) ஏழு வீதம் அறவிடப்பட வேண்டும் என பிரேரிக்கின்றேன்.

மேலும் 2022 ஆம் ஆண்டின் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு காலாண்டிற்காக அதற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட வருடாந்த வரிப்பணத்தை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு வருடாந்த வரிப்பணத்தை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தினால் வருடாந்த வரியிலிருந்து நூற்றுக்கு பத்து (10%) வீத வரி தள்ளுபடியும், அந்த உப ஆவணத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கு முன்னால் மூன்றாவது வரிசையில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வரிப்பணம் பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்தப்படுமானால் அந்த காலாண்டிற்குரிய வரிப்பணத்திலிருந்து நூற்றுக்கு (5%) வீத வரி தள்ளுபடியும், பிரதேச சபையினால் வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.

வரிப்பணத்தை ஒவ்வொரு காலாண்டுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் அந்தப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக வெளிப்படுகின்ற உத்தரவுப்பத்திரத்தின் பிரகாரம் ஆதனவரி அறவீடுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியுள்ள வரியில் இருந்து நூற்றுக்கு பன்னிரண்டு (10%) வீதம் மிகைக்கட்டணம் அறவிடுவதற்கான பிரேரணை.

**அட்டவணை**

| **காலாண்டு** | **செலுத்த வேண்டிய திகதி** | **5% கழிவு பெற செலுத்த வேண்டிய இறுதித் திகதி** |
|---|---|---|
| **நிரல் I** | **நிரல் II** | **நிரல் III** |
| 1 ஆம் காலாண்டு | மார்ச் 31 இற்று முன்னர் | ஜனவரி 31 |
| 2 ஆம் காலாண்டு | யூன் 30 இற்கு முன்னர் | ஏப்ரல் 30 |
| 3 ஆம் காலாண்டு | செப்டம்பர் 30 இற்கு முன்னர் | யூலை 31 |
| 4 ஆம் காலாண்டு | டிசம்பர் 31 இற்கு முன்னர் | ஒக்டோபர் 31 |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/45/03

சம்மாந்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வாகனங்கள், இயந்திரோபகரணங்களுக்காக II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தை 2022 ஆம் வருடத்திற்காக நிர்ணயம் செய்து அறவீடு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/45/04

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினால் பிரதேச சபை மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் சம்மாந்துறை பிரதேச சபையினால் பின்வரும் அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டு இருக்கும் சான்றிதழ் ஒன்றை அல்லது சேவை ஒன்றை வழங்கல் தொடர்பில் குறித்த அட்டவணையின் நிரல் II இல் குறித்த சான்றிதழ் அல்லது சேவையை வழங்கல் தொடர்பில் குறிப்பிடப்பட்டு இருக்கும் கட்டணத்தை 2022 ஆம் வருடம் தொடர்பில் விதித்து அறவிட வேண்டும் எனவும் குறித்த சேவையை அல்லது சான்றிதழை பெறுபவரால் குறித்த சேவையை அல்லது சான்றிதழை பெறமுன் அக்கட்டணத்தை சம்மாந்துறை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/45/05**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150, 151, 152 ஆகிய பிரிவுகளின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் படி, 2022 ஆம் வருடத்தின் பொருட்டு குறிப்பிடப்பட்ட வியாபாரங்களிலிருந்து உரிமைக் கட்டணமும் அல்லது வரியும் விளம்பரக் கட்டணமும் சம்மாந்துறை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 2022 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 1 ஆந் திகதிக்கு முதல் செலுத்துவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/45/06**

S வாய்க்கால் ஓரமாக பாதை அமைத்தலும், உடங்கா – 02 இல் பல்கலைக்கழகத்திற்கு பின்னால் இருக்கும் காணியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கும் நீர்ப்பாசன திணைக்களத்தின் வழிகாட்டியின் படி செயற்படுத்துவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/45/07**

LDSP திட்டத்தின் கீழ் கீழ்வரும் வேலைகளை செய்வதற்கான பிரேரணை.

1. Amusement Park விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல் - பழைய பொதுச் சந்தை (ஆலையடிப் பொதுச் சந்தை)
2. அமீர் அலி பொதுநூலக டிஜிடல் விரிவுரை மண்டப விஸ்தரிப்பு வேலைகள்.
3. வாகனத் திருத்தத்திற்கான தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு மற்றும் வாகன சேர்விஸ் செய்வதற்கான தரிப்பிடம் (Ramp) அமைத்தல்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/45/08**

தகுதியான ஊழியர்களுக்கு மழை அங்கி பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/45/09**

சென்னல் கிராமம் - 01 இல் வதியும் ஜனாப் ஜவாயீர் என்பவரின் வீடு மழைக் காலங்களில் வடிகான் இன்மையால் முற்றாகத் தாழ்வதால் அரபா பள்ளிவாசல் முன் வடிகான் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/45/10**

ZA – 5277 இலக்க JCB இன் முன் டயர் மாற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கிழக்கு மாகாண மின்சார அமைச்சினால் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மின்சாரம் இல்லாத பாதைகளை இனங்கண்டு அதில் உள்ள அட்டவணையை எல்லோரும் பூரணப்படுத்தி உரிய நேரத்திற்கு தர வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதையில் கம்பி இல்லாமல் சொந்த வயர் மூலமாக வீட்டுக்கு இணைப்பு இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியான பாதைகளை இனங்கண்டு அதன் விபரங்களை தாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மஜீட்புரத்திற்கு செல்கின்ற பாதைகளிலும் இணைப்பு ஏற்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் முயற்சி ஒன்று செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதே போன்று நைனாகாட்டு பாலத்தடியில் இருந்து ஏறத்தாள 1.5 கிலோ மீற்றர் வரையான சுரிப்போட முந்தல் வீதி வரைக்கும் இடையிடையே குடியாட்டங்கள் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு குடியாட்டங்கள், தொழிற்சாலைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். அதை ஊக்குவிப்பாக செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/45/11**

சம்மாந்துறையில் இருந்து மஜீட்புரத்திற்கு செல்கின்ற பாதை மற்றும் நைனாகாடு இருந்து சுரிப்போட முந்தல் வீதியில் இருக்கும் குடியாட்டங்கள், தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக மின் இணைப்பை ஏற்படுத்துவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் நமது மொத்த வருமானம் 86.7 மில்லியன். இதில் 31.2 மில்லியன் நீதிமன்ற தண்டப்பணமும், முத்திரை தீர்வையும் வரும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் இறைச்சிக் கடைகளினால் 15.2 மில்லியன் வருமானமாக கணிக்கப்பட்டுள்ளது. 86.7 மில்லியனில் 31.2 மில்லியன் கொவிட் தாக்கத்தையும் வைத்து உத்தேசமாக கணிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இறைச்சி விற்பனை செய்ய இயலாது என்று சொன்னால் 15 மில்லியனும் நமக்கு இல்லை. நாம் 100% முயற்சி செய்து எடுக்கக் கூடிய வருமானம் 40.3 மில்லியன். நமது அடிப்படை செலவுகளில் ஊழியர்களின் சம்பளம் தான் மிகப் பெரிய சுமை. கிட்டத்தட்ட வருடத்திற்கு 32.8 மில்லியன். சுகாதார சேவைகளுக்கு கிட்டத்தட்ட 7 மில்லியன். நமது சொந்த வருமானத்தில் இந்த சேவைகளை மட்டும் பூர்த்தி செய்யலாம். அதற்கு அப்பால் அபிவிருத்தி வேலைகளை முத்திரை தீர்வை, நீதிமன்ற தண்டப்பணத்தினை வைத்துதான் நாம் இவ்வளவு காலமும் நடாத்தி வந்திருக்கின்றோம். 2021.10.31 வரைக்கும் நமது கையிருப்பில் இருப்பது 26.1 மில்லியன். இதில் நவம்பர் மாதத்தின் செலவுகள், சம்பளம் வரவில்லை. ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதத்தில் எதுவும் வரப்போவதில்லை. அதனால் நமது காலம் முடிவடைவதற்குள் இறைவனின் உதவியோடு எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் உருவாகும் புது சபைக்கு பாரம் கொடுக்கலாம். இது எமது இறுதியான வரவு செலவுத் திட்டம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் நமக்கு இயலுமான கலந்துரையாடல்கள் எல்லாவற்றின் மூலமாகவும் மாற்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சில முன்மொழிவுகள் செய்திருக்கின்றார். கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் அவரது பிரேரணையில் எமது பிரதேசத்தில் பயன்படுத்தப்படுகின்ற டம்ரக் வண்டி வைத்திருப்பவர்களிடம் இருந்து வருடாந்த வரி 500 – 1000 வரை அறவிடல். இது பிரதேச சபை சட்டத்தின் 147 பிரிவின் கீழ் வருகின்றது. இதை நமக்கு செயற்படுத்துவதற்கு தற்போது ஒரு உப விதி இல்லை. உப விதி உருவாக்க வேண்டும். ஆனால் இதை ஒரு வருமானமாக கணித்து போடலாம். ஆனால் உத்தேச கணக்கு போடுவது என்றால் எத்தனை வாகனங்கள் இருக்கின்றது, எவ்வளவு வரும், ஒரு டம்ரக் இற்கு ஒரு மாதம் எவ்வளவு வரி அறவிடலாம் என்று இருக்கின்றது. ஏனென்றால் சட்டத்தைப் பார்க்க வேண்டும். தயவு செய்து முன்மொழிவுகள் செய்யும் போது பிரதேச சபையின் சட்டத்தைப் படித்துவிட்டு முன்மொழிவுகள் செய்தால் இலேசாக இருக்கும். உப விதி இருந்தாலும் அது மாகாண சபைக்கு சென்று அங்கீகரிக்கப்பட்டால் செய்யலாம். அதை ஒரு வருமானமாக கணித்து சேர்க்கலாம்.

அடுத்ததாக பதிவு செய்யப்படாத கடைகளை பதிவு செய்வதற்கான முயற்சிகள் செய்யப்படுதல். இது ஏறத்தாள 1050 கடைகள் பதிவில் இருக்கின்றது. சில இடங்களில் வாழ்வாதாரத்திற்காக சிறிய கடைகள் இருப்பதை நாம் பதிவு செய்யவில்லை. கடைகளை பொருத்தவரையில் ஏறத்தாள 95% கடைகள் உள்வாங்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக இதுவரை 22 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மட்டுமே அறவிடப்படுகின்றது. அதை 30 கிராம சேவகர் பிரிவுகளாக அதிகரித்தல். இதை நாம் செய்து விட்டோம். தற்போது புதிதாக கருவாட்டுக்கல் 1, 2, 3, 4, வீரமுனை எல்லாம் அறவிடுகின்றோம். இன்ஷா அல்லாஹ் அடுத்த வருடத்திற்குள் சென்னல் கிராமம் 01, 02 தவிர ஏனைய பிரதேசங்கள் வரிக்குள் வந்துவிடும்.

அடுத்தது விவசாயிகளிடம் இருந்து ஏக்கர் வரி அறவிடுதல். ஏற்கனவே சபையில் கதைத்திருக்கின்றோம். 10 ஏக்கருக்கு குறைவானதும் 02 ஏக்கருக்கு மேற்பட்டதற்கும் ஒரு வருடத்திற்கு 50.00 ரூபா அறவிடலாம். 10 ஏக்கருக்கு மேற்பட்டதற்கு 2 ½ ஏக்கருக்கு 10.00 ரூபா

வீதம் அறவிடலாம். இதற்கும் உப விதி தேவை. இதை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் அதிகம். ஒரு வருமானமும் இல்லாத சபைகள் அதுவும் பார்க்கின்றார்கள். ஆனால் ஒருவரும் அறவிடவில்லை. தரிசு நிலங்கள் நாம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இதில் அதை சேர்த்திருக்கின்றோம்.

கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களின் வேண்டுகோள் நீங்கள் சந்தோசப்படலாம் தற்போது நமது Road Inventory பூரணமடைந்துள்ளது. ஒவ்வொரு பாதையும் பதிவிடப்பட்டிருக்கின்றது. மொத்தப் பாதைகள் 716. பிரதேச சபைக்குரிய பாதைகளின் நீளம் 254.7Km. RDA இற்குரியது 41.6Km, RDD இற்குரியது 26.3Km மொத்தம் 322Km சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் இருக்கின்றது. ஒவ்வொரு குறிச்சாக இந்த பாதைகளின் Inventory இருக்கின்றது. அடுத்த கிழமை ஒரு நாளைக்கு எல்லோரும் கூடி ஒவ்வொரு குறிச்சாக பார்த்து நாம் செய்யக்கூடிய முன்மொழிவுகளை செய்து அதற்கு பின்னர் மக்கள் பிரதிநிதிகளை எடுத்து பேச வேண்டும். அதற்கு பின்னர் வர்த்தமானி அறிவித்தல் செய்து கால அவகாசம் கொடுத்த பின்னர்தான் பெயர் இடுகின்ற வேலைகளை செய்யலாம். நமது வேலைகளை டிசம்பர் மாதத்திற்குள் செய்து முடிப்போம். பெயர் பலகையை இடுவதற்கு நாம் செலவளிக்க தேவையில்லை. அதற்கு விளம்பரத்துடன் வருவார்கள். நீங்கள் சொல்லலாம் மற்ற இடங்களில் செய்திருக்கின்றது என்று, அது சட்டவிரோதமாக செய்யப்பட்டுள்ளது. நாம் என்ன செய்வது என்றாலும் சட்டப்படி ஒருவர் எம்மை சட்ட சவாலுக்கு ஏற்படுத்தாத வகையில் செய்ய வேண்டும். அதற்கு தற்போது எஞ்சியிருக்கின்ற வேலை நாம் கூடி முன்மொழிவுகளை மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டு மக்களுக்கு அறிவித்து ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் அதற்குரிய பெயர்களை அறிவிக்கலாம். அவர்களின் மாற்றுக் கருத்துக்கள் வருமானால் அதை ஆலோசித்து அதற்கு பின்னர் மாகாண சபைக்கு அனுப்பலாம். நாம் டிசம்பர் மாதத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். எல்லோரினது பங்களிப்போடும் 2021.11.21 ஆந் திகதி ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் ஆராய்வோம்.

இந்த வரவு செலவுத் திட்டம் இறுதி வரவு செலவுத் திட்டம் என்பதால் இந்த சபை ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். இது எமது இறுதியான வரவு செலவுத் திட்டம். அதில் நாம் வாக்கெடுப்புக்கு செல்வது நாம் இவ்வளவு காலமும் ஒற்றுமையாக பயணித்தாக இருக்காது. மாற்றுக்கருத்துகள் இருக்குமானால் வாக்கெடுப்பிற்கு செல்லலாம். இல்லாவிட்டால் ஏகமனதாக தீர்மானித்ததாக எடுப்போம்.

**தீர்மானம் - 04/45/12**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்கள் எல்லோருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்வருகின்ற வருடம் சில வேளை சபை நீடிக்கலாம் அல்லது நீடிக்காமலும் விடலாம். அந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு எங்களது பிரதேச சபை உறுப்பினர்களுடைய தேவைகளை அறிந்து அவர்களுக்குரிய வலுவூட்டல் சம்பந்தமான விடயங்களை நிறைவேற்றுவதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் எல்லோரும் என்மேல் வைக்கின்ற குற்றச்சாட்டு பணத்தை வைத்துவிட்டு செல்கின்றார் என்று, நமது நிர்வாகம் நமக்குள் எவ்வளவோ பிணக்குகள் இருந்தாலும் மாவட்டத்தில் மட்டுமல்ல மாகாணத்தில் கூட ஒரு முன்னுதாரணமான சபையாக ஊழியர்களை முன்வைத்து செல்கின்ற சபையாகத்தான் இயங்குகின்றோம். உங்களிடம் ஒன்றும் மறைக்கவில்லை. நான் இவ்விடத்தில் இவ்வளவு பணம் இருக்கின்றது என்று சொல்லாமல் இருந்திருக்கலாம். நாம் செல்வதற்கு முதல் முடித்துவிட்டு செல்லக்கூடாது. 03 மாதத்திற்குரியதை பாதுகாப்பாக வைக்க வேண்டும். விமர்சிப்பது இலகு. செயற்படுத்துவது கஸ்டம். ஊழியர்களைப் பற்றி நமக்குள் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு 97 குடும்பங்கள் வாழ்கின்றது. சுனாமி காலத்தில் இருந்து நாம் வாழ்வாதாரம் கொடுத்து வருகின்றோம். ஒருவரும் வாழ்ந்ததும் இல்லை வளர்ந்ததும் இல்லை. உங்களை நினைவு கூறுகின்ற விடயத்தை செய்ய வேண்டும். அடுத்த மாதத்திற்கு நமக்கு இயலுமானதை ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்குவோம். அடுத்த வருடத்திற்குரியதை நாம் பெப்ரவரி மாதம் இருந்தால் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எமது கைகாட்டி சிறுவர் பூங்காவின் அபிவிருத்திக்காக நேரடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதை அறியத்தருவதோடு, இன்று அந்தக் குளம் தோன்றப்பட்டதன் காரணமாக எமது சிறுவர் பூங்கா அழிந்து செல்கின்ற நிலமை ஏற்பட்டுள்ளது. இன்று எம்மால் நிர்ணயிக்கப்பட்ட வேலி கூட உடைந்திருக்கின்றது. எனவே இந்த குளத்தை அழகுபடுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிலே வேறு ஒரு விடயம் சம்மந்தப்பட்டதாக இன்று பாவனைக்கு உகந்த நிலையில் குளம் தோன்றப்பட்டுள்ளது. தோன்றியதில் மிகவும் மோசமான நிலையில் உள்ளது எமது சிறுவர் பூங்காவை அண்டிய பிரதேசம். இன்று கட்டம் கட்டமாக மண் கட்டிகள் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றது. குளத்தை எந்த நோக்கத்திற்காக வேலை ஆரம்பித்தார்களோ அதனை இறுதிக் கட்டமாக முடிவடையச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் எமது சபையினால் அதனை பராமரித்து அந்த வேலைகளை நிறைவு செய்து சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய இடாக மாற்றலாம்.

அத்தோடு கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று எமது ஊரில் உள்ள இளைஞர்கள் குறிப்பாக கடின பந்து விளையாடுகின்ற இளைஞர்கள் மிகவும் கவலைக்குரிய நிலையில் அவர்களுடைய விளையாட்டுக்களை ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று எமது ஊரில் மிகக் கூடுதலான விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டு வீரர்கள் கடின பந்து விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஏறத்தாள 08 விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இவர்களுக்கு அந்த விளையாட்டினை சிறந்த முறையில் விளையாடுவதற்கு பயிற்சியளிக்கக்கூடிய பயிற்சி கூடம் ஒன்று தேவை. ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் அந்த கூடாரத்தை அமைத்து பயிற்சியை வழங்குவதற்கான முயற்சி இந்த சபையின் ஊடாக செய்ய வேண்டும் என்பதை தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மலையடிக் கிராமம் - 03 இற்கும், மலையடிக் கிராமம் - 04 இற்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் இருந்து உட் செல்லும் பாதையாக காணப்படுகின்றது. அந்தப் பாதையின் முடிவு சில்வாட இறக்கம் வரை செல்கின்றது. அதில் இருந்து மறுபக்கம் கைகாட்டி சந்திக்கும் அப் பாதையினால் மக்கள் போக்குவரத்து செய்கின்றார்கள். அந்தப் பாதையில் உள்ள பாலம் மிகவும் பதிந்த நிலையில் காணப்படுவதால் அந்த வாய்க்காலில் நீர் வழிந்தோடுவது கஸ்டமாக இருக்கின்றது. அப் பாதையில் எந்த நேரமும் கணரக வாகனங்கள் செலுத்துவதனால் அப் பாதை இன்னும் மிகவும் சேதம் அடைந்த நிலையிலும் காணப்படுகின்றது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் இந்தப் பாதையை திருத்தியமைத்து புதிய பாலம் ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் இருக்கின்ற மிகவும் கூடுதலான மக்களின் கருத்தை உள்வாங்கி இவ்விடத்தில் எத்திவைக்கின்றேன். முச்சக்கரவண்டி ஓட்டுனர்களின்

கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய விடயம் என்னவென்றால் முச்சக்கரவண்டிக்கு மீட்டர் பொருத்தி இருக்கின்றார்கள் ஆனால் அதை இயங்க வைத்து ஒருவரும் முச்சக்கரவண்டியை செலுத்துகின்றார்கள் இல்லை. அவர்களுக்காக சங்கங்கள் இருக்கின்றது. சங்கத்தில் இருக்கின்ற தலைவர், செயலாளர், பொருளாளர் அவர்களை அணுகி தெளிவுபடுத்த வேண்டும். மக்களின் பாவனைக்கு அவர்கள் உரிய நேரத்திற்கு செல்லாமல் இருக்கின்றார்கள். இதனால் ஊர் மக்கள் மிகவும் அசௌகரியமான நிலையில் இருக்கின்றார்கள். முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் கூடுதலான கட்டணத்தை அறவிடுகின்றார்கள். உரிமையாளர்களை அழைத்து எங்களது சபையால் ஒரு கருத்தை தெளிவு படுத்தினால் நல்லது என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நிச்சயமாக அந்த அறிவித்தலை கொடுப்போம்.

கௌரவ உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல்களை விளம்பரப்படுத்தல் தொடர்பாக எனக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த சபையின் தீர்மானமாக எடுத்து அப்துல் மஜீட் மண்டபத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து ஒவ்வொரு சபையின் உறுப்பினர்களின் பெயர்ப்பலகையை செய்ய வேண்டும்.

## தீர்மானம் - 04/45/12

சம்மாந்துறையின் உள்ளூராட்சி சபைகளின் சரித்திரத்தை வெளிப்படுத்தும் நோக்கமாக ஆரம்பத்தில் இருந்து உள்ளூராட்சி சபைகளின் மக்கள் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியல் கொண்ட பதாதைகளை அப்துல் மஜீட் மண்டபத்தில் வைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முச்சக்கரவண்டி விடயமாக அவர்களுடைய விலை நிர்ணயம் மிகவும் மோசமான நிலையில் எடுக்கப்படுகின்றது. இதை சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து முச்சக்கரவண்டிக்கு முதற்கட்டமாக மீட்டர் பொருத்த வேண்டும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலை மீட்டர் பாவனையில் இருந்தால் எல்லோருக்கும் பாதகம் இல்லை. சென்னல் கிராமத்தில் இருந்து வைத்தியசாலைக்கு வந்து செல்வதற்கு 600.00 ரூபா எடுக்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மக்கள் சேர்ந்து மீட்டர் போடாத முச்சக்கரவண்டியில் செல்லாமல் இருந்தால் மீட்டர் போடுவார்கள். சென்ற அரசாங்கத்தில் வாழ்வாதாரத்தின் கீழ் கௌரவ முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களினால் எல்லா சங்கங்களுக்கும் மீட்டர் எடுத்துக் கொடுப்பதற்கு ஒரு ஏற்பாடு இருந்தது. ஆனால் அது செயற்படுத்தப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதன் சரியான விடயம் மக்களுக்கு தெரியாது. இதை நாம் வெளிப்படையாக கொண்டுவர வேண்டும் என்றால் முதற்கட்டமாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள், போக்குவரத்து பொலிசார் ஊடாக முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
போக்குவரத்து பொலிசாரும், நாமும் சேர்ந்து முச்சக்கரவண்டி உரிமையாளர்களை அழைத்து ஒரு கலந்துரையாடல் செய்வோம். இத்துடன் சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை